செய்தி வெளியீடு எண்: 278 நாள் 19-05-2011

# செய்தி வெளியீடு

இன்று (19.05.2011) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் திருப்பூர் சாயப்பட்டறைகள் பிரச்சனை குறித்து தீர்வு காண ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், கைத்தறி மற்றும் துணிநூல்துறைச் செயலாளர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் துறைச் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் திருப்பூர் சாயப்பட்டறைகள் பிரச்சனைக்கு நிரந்தரமாக தீர்வு காணும் பொருட்டு தேவையான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவுறுத்தினார்கள். முதற்கட்டமாக சாயத் தொழில் அதிபர்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றும், அதைப்போலவே பாதிக்கப்பட்ட விவசாயிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்திட வேண்டும் என்றும், அதன் மூலம் இப்பிரச்சனைக்கு விரைவில் சுமூகமான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள் : 19.05.2011